


23.01.2025

<u>தலைப்புச்செய்திகள்</u>

1. சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்தநாளை ஒட்டி பராக்ரம தின கொண்டாட்டங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி, புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

2. இந்தியா அமெரிக்கா இடையே வலுவான நட்புறவு திகழ்வதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. கீழடி திறந்தவெளி மற்றும் கங்கை கொண்ட சோழபுரம் அருங்காட்சியகங்களுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

4. டெல்டா மாவட்டங்களில் நெல்லின் ஈரப்பதம் குறித்து மத்திய குழுவினர் இன்றும் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

5. இந்தோனேசிய மாஸ்டர் பேட்மிண்டன் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் டனிஷா கிறாஸ்டோ, அஷ்வினி பொன்னப்பா இணை இன்று களம் இறங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

<u>நேதாஜிசுபாஷ்</u>

உலக அளவில் இந்தியாவை முன்னெடுத்து செல்ல அனைவரும் தனித்திறனில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி, வலியுறுத்தியுள்ளார்.

சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 128-வது பிறந்தநாளை ஒட்டி பராக்ரம தின கொண்டாட்டங்களை புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், இந்தியா வளர்ச்சி அடைந்த நாடு என்ற நிலையை எட்ட நேதாஜியின் வாழ்க்கை முறை தொடர்ந்து உத்வேகத்தை அளித்து வருவதாக கூறினார்.

நாட்டின் சுதந்திர போராட்டத்தில் நேதாஜியின் கொள்கைகளும், அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் நம்மை தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக எடுத்துரைத்தார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக சவாலான வாழ்க்கை முறையை நேதாஜி தெரிவு செய்ததாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் நேதாஜியின் வாழ்க்கை வரலாறு குறித்த கண்காட்சியை பிரதமர் திறந்துவைத்தார்.

முன்னதாக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாளை ஒட்டி குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டின் சுதந்திர போராட்டத்தில் மிகவும் உறுதியான ஊக்கமுடையவராக திகழ்ந்தவர் நேதாஜி என புகழாரம் சூட்டியுள்ளார்.

இத்தினத்தை ஒட்டி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள நேதாஜியின் திருவுருவபடத்திற்கு பிரதமர், மத்திய அமைச்சர்கள், மக்களவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வின்போது பள்ளி மாணாக்கரிடையே பிரதமர் கலந்துரையாடினார்.

மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகம் சார்பில் நேதாஜி பிறந்த இடமான ஒடிஷா கட்டாக்கில் இன்றுமுதல் 3 நாள் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருச்சி பாரதிதாசன் பல்கலைகழகத்தில் இன்று நடைபெற்ற நேதாஜியின் பிறந்த நாள் விழாவில் தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி பங்கேற்று நேதாஜி நினைவு தோட்டத்தை திறந்துவைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

<u>ஜெய்சங்கர்</u>

இந்தியா அமெரிக்கா இடையே வலுவான நட்புறவு திகழ்வதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டன் னுஊ-இல் செய்தியாளர்களிடம் பேசிய அவர் உலகளாவிய மற்றும் இருதரப்பு நல்லுறவு சார்ந்த விஷயங்களில் இருநாடுகளும் முழுஒத்துழைப்பை கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் நாட்டுடன் வர்த்தகத்தை மீண்டும் தொடர்வது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்று கூறிய அவர் கடந்த 2019ஆம் ஆண்டு இத்தீர்மானத்தை பாகிஸ்தான் நிர்வாகம் மேற்கொண்டதாக கூறினார்.

பாகிஸ்தானுடனான வர்த்தகத்தை இந்தியா தானாக நிறுத்தவில்லை என்றும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

<u>குடியரசுதினம் ஒத்திகை</u>

நாட்டின் 76ஆவது குடியரசு தினம் வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுவதை ஒட்டி முழு அணிவகுப்பு ஒத்திகை புதுதில்லி கர்த்தவ்ய பாதையில் இன்று நடைபெற்றது.

விஜய் சவுக் தொடங்கி செங்கோட்டை வரை நடைபெற்ற இந்த அணிவகுப்பு ஒத்திகையை ஏராளமானோர் கண்டு களித்தனர்.

குடியரசு தினத்தை ஒட்டி அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பூபேந்தர் யாதவ்

கோவை வன உயிரின அருங்காட்சியகத்தை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் இன்று பார்வையிட்டார்.

தொடர்ந்து அமைச்சர் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற ஆலோசனைக்குழு கூட்டத்தில் வன நிலபரப்பு பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் மற்றும் திட்டங்களின் நிலை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

வன மரபியல் மற்றும் மரம் வளர்ப்பு நிறுவன மையத்தில் அரங்கங்களை திறந்துவைத்து பார்வையிட்ட அமைச்சர் வேளாண் விஞ்ஞானிகளிடம் ஆலோசனை மேற்கொண்டார்.

முன்னதாக கோவையில் மத்திய உயர் பயிற்சியக வளாகத்தில் அன்னையின் பெயரில் ஒருமரம் திட்டத்தின் கீழ் அமைச்சர் மரக்கன்றை நட்டு வைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஈரோடு

தில்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரேகட்ட வாக்குப்பதிவு வரும் 5ஆம் தேதி நடைபெறுவதை ஒட்டி அரசியல் கட்சிதலைவர்களின் பிரச்சாரம் அங்கு தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக அக்கட்சியின் மூத்த தலைவரும், உத்திரபிரதேச மாநில முதலமைச்சருமான திரு.யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் இன்று பல்வேறு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மக்களவை எதிர்கட்சி தலைவருமான திரு.ராகுல்காந்தி முஸ்தபா பாத்தில் நடைபெறும் தேர்தல் பேரணியில் பங்கேற்க உள்ளார்.

ஆம் ஆத்மி கட்சி தலைவர்களும் பல்வேறு பகுதிகளில் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்துடன் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதியில் 85 வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கான தபால் வாக்குப்பதிவு இன்று தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் பதிவாகும் வாக்குகளும்,

ஈரோடு கிழக்கு, உத்திரபிரதேசம் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் பதிவாகும் வாக்குகளும் வரும் 8ஆம் தேதி எண்ணப்படும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

தமிழ் நிலபரப்பிலிருந்து இரும்பின் காலம் தொடங்கி உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னையில் தொல்லியல் துறை சார்பில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஐந்தாயிரத்து 300 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நிலபரப்பில், இரும்பின் அறிமுகம் அறிவியல் ரீதியாக நிரூபணம் ஆகியுள்ளது என்றார்.

அண்மைகால அகழாய்வு முடிவுகள் வாயிலாக உலக அளவில் இரும்புதாதுவிலிருந்து இரும்பினை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலபரப்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பான ஆய்வுகளை தமிழ்நாடு தொல்லியல்துறை தொடர்ந்து மேற்கொண்டுவருவதாகவும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கீழடி திறந்தவெளி மற்றும் கங்கை கொண்ட சோழபுரம் அருங்காட்சியகங்களுக்கு முதலமைச்சர் காணொலி மூலம் அடிக்கல் நாட்டி இரும்பின் தொன்மை எனும் நூலையும் வெளியிட்டார்.

தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோவில் புனரமைப்பு பணிகளை முதலமைச்சர் காணொலி மூலம் தொடங்கிவைத்தார்.

15 கோடியே 54 லட்ச ரூபாய் மதிப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நேரு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் திருச்சி திருவெறும்பூர் எலந்தபட்டி கிராமத்தில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒலிம்பிக் அகாடமி கட்டுமான பணிகளுக்கு மாநில அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திருஅன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் இன்று அடிக்கல் நாட்டினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு.கே.என்.நேரு இப்பணிகள் 18 மாதங்களில் நிறைவடையும் என்றும், அனைத்துவிதமான விளையாட்டுகளுக்கும் இதில் பயிற்சி அளிக்கப்படும் என்றும் கூறினார்.

50 ஏக்கர் பரப்பளவில் இப்பணிகள் 2 கட்டங்களாக நடைபெற உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

போதைபொருள்

தூத்துக்குடி பழைய துறைமுகத்திலிருந்து மாலத்தீவுக்கு கடத்தப்பட இருந்த 12 கிலோ போதை பொருளை மத்திய வருவாய் புலனாய்வு துறையினர் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் திருவள்ளூர் மாவட்டம் வீரராகவபுரம் சோதனை சாவடியில் காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையின்போது ஆந்திராவிலிருந்து காரில் கடத்திவரப்பட்ட 5 லட்ச ரூபாய் மதிப்பிலான 300 கிலோ குட்கா போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

வேலூரில் மருத்துவ உபகரணங்கள் விற்பனை நிலையத்தில் சட்டவிரோதமாக பதுக்கிவைக்கப்பட்டிருந்த 30 லிட்டர் மெத்தனாலை பறிமுதல் செய்த வருவாய் துறை அதிகாரிகள் நிலையத்திற்கு சீல் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

<u>மத்திய குழு</u>

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் பகுதியில் மத்திய உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் நெல்லின் ஈரப்பதம் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

தொடர்ந்து விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்த மத்திய குழுவினர் நாகை மயிலாடுதுறை மாவட்டங்களில் ஆய்வு செய்ய உள்ளனர்.

இதுகுறித்து எமது நாகை செய்தியாளர்

வாய்ஸ்

முன்னதாக டெல்டா மாவட்டங்களில் பருவம் தவறி பெய்த கனமழை மற்றும் அதிக பனிப்பொழிவு காரணமாக சம்பா, தாளடி பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நெல்லின் ஈரபதத்தை 22 சதவிகிதம் வரை உயர்த்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்ததை அடுத்து இந்த ஆய்வு நடைபெற்று வருகிறது.

இந்த ஆய்விற்கு பின்னர் இக்குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் நெல்லின் ஈரப்பதம் உயர்த்துவது தொடர்பான அறிவிப்பை மத்திய அரசு வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே தென்காசி மாவட்டத்தில் மழை மற்றும் பனிக்காரணமாக பாதிப்படைந்துள்ள பயிர்களை மாவட்ட வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

<u>நீதிமன்றம்</u>

உணவு மற்றும் மளிகை பொருட்களை வீடுகளுக்கு விநியோகம் செய்யும் நிறுவனங்களின் ஊழியர்களை கண்காணிக்க விதிகளை வகுக்க கோரிய வழக்கில் தமிழக காவல்துறை தலைமை இயக்குனர் 4 வாரங்களுக்குள் பதில் அளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை இன்று விசாரித்த நீதிமன்றம் ளுறபைபலஇ ணழஅழவழ உள்ளிட்ட டெலிவரி நிறுவனங்களும் இக்கால அவகாசத்திற்குள் பதில் அளிக்க ஆணையிட்டுள்ளது.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

தூய்மை பணியாளர்கள்

தமிழ்நாட்டில் கழிவுநீர் பணிகளின்போது ஏற்படும் உயிரிழப்புகள் வரும் காலங்களில் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்று, தூய்மை பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தலைவர் திரு.வெங்கடேசன் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் இதுதொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் தூய்மை பணியில் உள்ள அனைத்து தொழிலாளர்களும் சமூக பாதுகாப்பு நலன்களை பெற வேண்டும் என வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கழிவுநீர்வடிகால் தூய்மைபணிகளை இயந்திரமயமாக்குதல், பணியின்போது உயிரிழந்தோரின் குடும்ப வாரிசுகளுக்கு கல்வி உதவிதொகை, மருத்துவ காப்பீட்டு திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சேலம் ஜெகநாதன்

2030ஆம் ஆண்டிற்குள் கல்வி, வேலை வாய்ப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பாலின சமநிலையை ஏற்படுத்த சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என சேலம் பெரியார் பல்கலைகழக துணைவேந்தர் பேராசிரியர் ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடைபெறும் இரண்டு நாள் கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர் மகளிர் உயர்கல்விபெறும் வாய்ப்பை குழந்தை திருமணங்கள் தடை செய்வதாக குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

நீலகிரி மாவட்டத்தில் பெண்குழந்தைகளை காப்பபோம் பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் தொடங்கி 10 ஆண்டு நிறைவை ஒட்டி கையெழுத்து இயக்கம் மற்றும் மிதிவண்டி பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி லெட்சுமி பவ்யா தண்ணீரு இன்று தொடங்கிவைத்தார்.

திருப்பூரில் சாலை பாதுகாப்பு மாத விழாவை ஒட்டி போக்குவரத்து காவல்துறை சார்பில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கான கண் பரிசோதனை சிகிச்சை முகாம் இன்று நடைபெற்றது.

திருச்சி, புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் தனியார்துறை வேலை வாய்ப்புமுகாம் மாவட்ட வேலைவாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டுமையத்தில் நாளை நடைபெறுகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பழங்குடியின இளைஞர்களுக்கான திறன்மேம்பாட்டு பயிற்சி நாளை நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் சிறுகளத்தூர் உள்ளிட்ட இடங்களில் இன்றும் நாளையும், நடைபெற இருந்த மக்களுடன் முதல்வர் முகாம்கள் நிர்வாக காரணங்களால் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ரூளுஊ குடிமை பணி தேர்வுகளுக்கு அடுத்த மாதம் 11ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம்.

முதல்நிலை தேர்வு வரும் மே 25ஆம் தேதி நடைபெறும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

<u>பேட்மிண்டன்</u>

ஜகார்தாவில் நடைபெறும் இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் டனிஷா கிறாஸ்டோ, அஷ்வினி பொன்னப்பா இணை – மலேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரான்கிரெட்டி – சிராக்ஷெட்டி இணை – தாய்லாந்து இணையுடன் மோதுகிறது.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் லக்ஷயா சென் - ஜப்பானின் நிஷி மோட்டோவை தற்போது எதிர்கொண்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

<u>கிரிக்கெட்</u>

கோலாலம்பூரில் நடைபெறும் 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் கடைசி லீக் ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற 119 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

முதலில் பேட் செய்த இந்தியா 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 118 ரன் எடுத்திருந்தது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு